அதுமட்டுமல்லாமல், இந்த வைகை மேம்பாட்டுத் திட்டத்தில் 4,000 ஏக்கர்களுக்கு தண்ணீர் கொடுப்பதாகச் சொல்லி, ரூ. 4 கோடி சாங்ஷன் செய்யப்பட்டு, அது உலக வங்கிக்கு கட்டுப்படியாகக் கூடிய திட்டமாக இல்லை என்று நிறுத்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி உலக வங்கி அதை நிறுத்தியிருக்குமானால், நம்முடைய மாநில அரசுத் தொகையிலிருந்து அந்தப் பணத்தை செலவு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோன்று, உலக வங்கியின் மூலம் எடுத்து, திட்டத்தை தீட்டுகின்ற நேரத்தில், ஒருசில கோட்பாடுகளின் அமைப்படையில் அந்தத் திட்டத்தை தீட்டி செய்கிறார்கள், அல்லது நாம் தீட்டுகின்ற திட்டத்திற்கு அவர்கள் ஒப்புதல் அளிக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு அவர்கள் ஒப்புதல் வழங்கிய பிறகுதான் அவர்களுடைய உதவியோடு இணைந்து செய்யக் கூடிய ஒரு திட்டமாக அது உருவாகும். அந்தத் திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கக் கூடிய அளவிற்கும் மேலாக தண்ணீர் கிடைக்குமானால், மிச்சப்படுத்தக் கூடிய தண்ணீரை நாம் நம்முடைய சொந்த நிதிபோட்டு, கூடுதலாக சில திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த முடியும். ஆனால் கூடுதலாக தண்ணீர் அப்படி கிடைக்கிறதா, இல்லையா என்பதைப் பார்க்க முதலில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். அந்தத் திட்டத்தை நிறைவேற்றிய பிறகுதான், ஒரு ஆண்டுகாலம் பொறுத்திருந்து, அந்தத் திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கக் கூடிய நன்மை போக, எஞ்சிய தண்ணீர் வீணாகிறதா என்று பார்க்கவேண்டும். அதற்குப் பிறகு தான் கூடுதலான திட்டத்தை மேற்கொள்ள முடியும். அப்படி மேற்கொள்ளக் கூடிய கால கட்டத்தில் தான் அந்தத் திட்டத்தை அரசு ஆய்வு செய்யமுடியும். ஆகவே இவ்வளவு சூழ்நிலைகளில் இருக்கக் கூடிய தன்மைகளில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து இதை வலியுறுத்துவது நியாமாக இருக்காது என்பதை அவருடைய கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன்.

பூலா ஏரி வாய்க்கால் திட்டப் பணிகளுக்குக் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள்.

606— (*வினா எண். 8980)— திரு. செ. செம்மலை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் பூலா ஏரி வாய்க்கால் திட்டத்திற்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காததால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை அரசு அறியுமா ?

1986 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், ஈட்டுத்தொகை கொடுக்க அரசு எடுத்து உள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) : இத் திட்டத்திற்கு 3.73 ஏக்கர் புன்செய் நிலத்தை கையகப் படுத்த நில எடுப்புச் சட்டத்தின் 4 (1)-வது பிரிவின் கீழான முன் மொழிவுகளுக்கு அரசு விரைவில் ஒப்புதல் அளிக்கும். நில எடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி விரைவில் இழப்பீட்டுத் தொகை வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப் படுவார்.

(முற்பகல் 10-10)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கையகப்படுத்தப்பட்ட அந்த நிலங்களுக்கு நட்ட ஈடு கொடுக்கப்படுகிறது என்று சொன்னாலும் இன்றைக்கு இருக்கிற நிலையில் நட்ட ஈடு கொடுப்பதிலே வீணாக கால தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்பது யதார்த்தமான உண்மை. காரணம் வருவாய்த் துறையும் பொதுப் பணித் துறையும் இணைந்து செயலாற்ற வேண்டிய நிலை இருக்கிறது. இரண்டு துறைகளும் இணைந்து கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நட்ட ஈடு கொடுக்கிற போது குறிப்பிட்ட ஒரு கால அளவு நிர்ணயம் செய்து அதற்குள்ளாக கட்டாயமாகக் கொடுத்தாக வேண்டு மென்ற முறையிலே விரைவாக நட்டஈடு கொடுக்கச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின் அடிப்படையில் அறிக்கைகள் அனுப்ப வேண் டும். அந்த அறிக்கைகள் அனுப்பிய பிறகு உரிய முறையில் விளம்பரப்படுத்த வேண்டும். அதற்குப் பிறகு ஆட்சேபணை கள் வருகின்றதா என்று பார்க்க வேண்டும். அப்படி வந்த தற்குப் பிறகு விசாரிக்க வேண்டும். இப்படிப் படிப்படியாக பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த வகையில் தான் சட்டங்களும் விதிமுறைகளும் இருக்கின்றன. அதிலே மாற்றம் செய்ய வேண்டுமானால் பொதுப் பணித் துறையே தனியாகச் செய்துவிட முடியாது. அதைப் போலவே வருவாய்த்துறையும் தனியாகச் செய்துவிட முடியாது. நாட்ட ளவில் மாற்ற வேண்டுமென்றிருக்கிற விதிமுறைகள் ஆகும். அது மிகப் பெரிய பணி. ஆகவே அந்தப் பொறுப்பை உறுப் பினர் அவர்கள் என்னிடம் ஒப்படைக்கப் பார்க்கிறார்கள். அந்தப் பொறுப்பை அவர்களே ஏற்றுக் கொண்டு அதை மாற்று வதற்கு முன் மாதிரியாக செய்கிற முறையில் செய்தால் எனக்கும் பெரிய தலைவலியை நீக்குவதாக இருக்கும்.

[1986 ஏப்ரல் 28

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இந்த ஆர். எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட இந்தப் பணி முடிவடையாமல் இருக்கக் காரணம் நிதிப் பற்றாக்குறை தான் என்று சொல்கிறார்கள். ஆகவே தேவையான நிதியை ஒதுக்கி, இந்த ஆண்டிலேயே நிதியை ஒதுக்கி அந்தப் பணியை விரைவுபடுத்த அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற்கொள் வார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் இது வரக்கூடிய திட்டம் ஆகும். இதற்குத் திட்ட மதிப்பீடு ரூ. 22 லட்சம் ஆகும். இந்தத் திட்டத்தை நாம் மேற்கொள்வதற்கு நிலத்தைக் கையகப் படுத்த வேண்டிய பணிகள் போன்ற பணிகள் தேக்கத்திலே நின்று விட்டன. எனினும் நம்முடைய பொதுப் பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் 28–5–1984 அன்று பணியைத் துவக்கினால் நல்லது என்று தொடர்ந்து பணியைச் செய்கிறபோது ஆர். எல். இ. ஜி. பி.-யிலிருந்து வரக் கூடிய நிதி வருவதற்குச் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. நிறுத்திய பணிகளை விரைவில் நிறைவேற்ற, அந்தப் பணிகளின் நன்மைகள் மக்களுக்குக் கிடைக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வி. பி. சிந்தன், ப. பொன்னுரங்கம், பரிதி இளம்வழுதி ஆகியோர் ஸ்டான்லி பிரச்சனையைப் பற்றி அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் வரவில்லை....

திரு. அ. ரகுமான்கான் : நான் கொடுத்து பத்து நாளாகி விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குக் காலையிலே தான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.